நண்பகல் 12-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு ''.

செய்யத் தகுந்த செயலையும் வழிகளையும் எண்ணிய பிறகே துணிந்து தொடங்க வேண்டும். துணிந்த பின் எண்ணிப் பார்க்கலாம் என்பது குற்றமாகும்.

1. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்கீழ் சில உறுப்பினர்கள் பதவி இழப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்த அவையின் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களான திரு. நாவலர் நெடுஞ்செழியன், திரு. எஸ். பண்ருட்டி இராமச்சந்திரன், திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. ஆர். சௌந்திரராஜன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், திரு. செ. அரங்கநாயகம் ஆகியோர் மீது கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்கீழ்................(கூச்சல்—குழப்பம்)........கொடுத்தார்கள். ஆகவே, அவர்கள் கட்சித் தாவிவிட்டார்கள்........(கூச்சல்—குழப்பம்) என்பதைச் சொல்லி அவர்களை இந்த அவையிலிருந்து (கூச்சல்—குழப்பம்) ....கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்கீழ் பதவி இழக்கிறார்கள் என்று நடவடிக்கை எடுத்து, வெளியேற்றுகிறேன் (கூச்சல்—குழப்பம்).

(உறுப்பினர்கள் சிலர் கூச்சலிட்டுக் கொண்டு பேரவைத் தலைவரை நோக்கிப் பாய்ந்து பெரும் அமளி செய்தனர். மைக்குகள் முறிக்கப்பட்டன. நாற்காலிகள் உடைக்கப்பட்டன. பேப்பர் வெயிட்டுகள் வீசப்பட்டன.)

...............3 மணிக்கு அவை கூடும். (கூச்சல் குழப்பம்)

பின்னர் பேரவை நண்பகல் 12–07 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

பிற்பகல் 3—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது. (கூச்சல்—குழப்பம்)...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எது வேண்டுமானாலும் செய்யலாம்..........(கூச்சல்– குழப்பம்).

(பல உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகில் வந்து பெரும் அமளி செய்தனர். அவர்கள் பேரவைத் தலைவரின் ஆசனத்தில் அமர முயற்சித்தனர். உறுப்பினர் திரு. சிவராமன் பேரவைத் தலைவரின் மடியில் வந்து அமர்ந்தார். பேரவைத் தலைவரின் மேசை கீழே தள்ளப்பட்டது. பேப்பர் வெயிட்டுகள் வீசப்பட்டன. மைக்குகள் உடைக்கப்பட்டு, நாற்காலிகள் தூக்கியடிக்கப்பட்டன. உறுப்பினர்களுக்குள் கைகலப்பு ஏற்பட்டு கலவர நிலை உருவாகியது. மாண்புமிகு பேரவைத் தலைவர் தம் அறைக்குச் சென்றார்.)

பின்னர் பேரவை பிற்பகல் 3-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலத்தோடு ஆராய்ந்து நடத்தல் நில்லாத இயல்புடைய செல்வத்தை நீங்காமல் நிற்குமாறு கட்டும் கயிறாகும்.

'' அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல். ''

ஒரு செயலைத் தொடங்கும் முன் அதனால் அழிவதையும், அழிந்தபின் ஆவதையும் பின்பு உண்டாகும் ஊதியத்தையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.

2. அமைச்சரவையின்மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு மற்றும் கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்கீழ் உறுப்பினர்கள் பதவி இழத்தல்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967ஆம் ஆண்டு தமிழகத்தின் விடிவெள்ளியாம் பேரறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கி வைத்த அரசை, 7 ஆண்டுக் காலம் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் காத்து வந்த அரசை, 10 ஆண்டுக் காலத்திற்கு மேல் தமிழகத்தின் நாயகன், டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கட்டிக் காத்து வந்த அரசைத் தொடர்ந்து நிலைநிறுத்த வேண்டும் என்கிற உணர்வோடு